**செ.வெ. எண்:680** **நாள்: 12.10.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 11.10.2017 அன்று தலைமைச் செயலகத்தில், மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றியமைக்காக 2014, 2015 மற்றும் 2016ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகளை தருமபுரி, தேனி, கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி, கரூர், நாமக்கல், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கி கௌரவித்தார்கள். மேலும், 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கிய நிறுவனங்களுக்கும் பசுமை விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 48–ன்படி, சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதும், நாட்டின் வளங்களைப் பாதுகாத்துப் பேணுவதும் மாநிலத்தின் பொறுப்பு. இதனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு மாநிலத்தின் உயிரின வாழ்க்கைச் சூழலை பேணி பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

அந்த வகையில், மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும், மாசு தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் தொழில் நிறுவனங்களை பாராட்டும் வகையிலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆண்டுதோறும் மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மூன்று தொழில் நிறுவனங்களை தேர்வு செய்து பசுமை விருதினை வழங்கி வருகின்றது.

அதன்படி, 2014ஆம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்களுக்கும், முன்னாள் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் கே.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., அவர்களுக்கும், முன்னாள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., அவர்களுக்கும், 2015ஆம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்களுக்கும், முன்னாள் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., அவர்களுக்கும், முன்னாள் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ச.ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்களுக்கும், 2016ஆம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர்

திருமதி மு.ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்களுக்கும், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்களுக்கும், முன்னாள் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. ஞானசேகரன், இ.ஆ.ப., ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பசுமை விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், மாசு தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கிய தொழில் நிறுவனங்களுக்காக 2015ஆம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட், கூடங்குளம் அணுமின் நிலையம், மிசெலின் இந்தியா பிரைவேட் லிமிடெட், லேன்கோ தஞ்சாவூர் பவர் கம்பெனி லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கும், 2016ஆம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை கோஸ்டல் எனர்ஜன் பிரைவேட் லிமிடெட், ஹுண்டாய் மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட், டால்மியா சிமெண்ட்ஸ் (பாரத்) லிமிடெட், ஆகிய நிறுவனங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர் செயலர் திரு. என். சுந்தரகோபால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**